**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 361 /2015**
**U/s. 379 IPC**
**PROSECUTION WITNESS NO. 4 (LW.7 )**

| | |
|---|---|
| **Name** : பி. செந்தில்குமார் | |
| **Father's/Husband Name :** | **Occupation** : |
| **Address** : | **Age** : /2026 |

**2**வது எதிரி ஆஜர் இல்லை **U/s. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. **(1**வது எதிரி **Split up CC No. 76/2026**ல் உள்ளார்**)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். திரு. கே.டி. கார்த்திகேயன் , தட்டச்சர்.**

**<u>C.C.No. 361/2015 23.03.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.00 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் அருகில் அசோக் நகரில் குடியிருந்து மாப்பிள்ளைநாயக்கன்பட்டியில் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 1,2 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் (எண்ணிக்கை 2) உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். **அந்த 1 வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3, முதல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 31.10.2015 ம் தேதி நான் விளார் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது மாலை 5 மணியளவில் தெற்கு காவல் நிலைய போலீசார் புது ஆற்றுபாலம் அருகில் உள்ள பெட்ரோல் பங்க் எதிரில் வாகன சோதனை செய்து கொண்டிருப்பதாகவும். அப்போது Hitachi வாகனம் திருட்டு சம்பந்தமாக 2 நபர்களை பிடித்திருப்பதாகவும் நானும் எனது உதவி ஆய்வாளர் திரு. சுரேஷ் இருவரும் அங்கு சென்றிருந்தோம். அங்கு TN 28A 8788 என்ற லாரி நின்றுகொண்டிருந்தது அதில் Hitachi இயந்திரமும் இருந்தது. அங்கு இருந்த சேட்டு, செல்வம் இருவரும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் தனது மடிகணினியில் பதிவு செய்ததில் நானும் என்னுடன் வந்த சுரேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னுடன் கையொப்பம் செய்த எனது உதவியாளர் திரு. சுரேஷ் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் எனக்கு அறிமுகமானவர் அல்ல என்றால் சரிதான். என்னுடைய அலைபேசி எண். ஆய்வாளருக்கு தெரியாது. விளார் கிராமத்திற்கும் விளார் பைபாசிற்கும் இடையில் உள்ள தூரம் 1/2 கிலோமிட்டர். ஆய்வாளர் எனக்கு என்னை தொடர்பு கொண்ட போது மாலை

4.45 மணி இருக்கும். மறுநான் அதிகாலை 4 மணி வரை நான் ஆய்வாளருடன் தான் இருந்தேன். நான் 3 இடங்களுக்கு ஆய்வாளருடன் சென்றேன். ஆய்வாளர் ஒவ்வொரு இடத்திலும் என்னிடம் கையொப்பம் வாங்கிகொண்டார். நான் கையொப்பம் செய்து கொடுத்த இடத்திலெல்லாம் என்னுடைய உதவியாளரும் கையொப்பம் செய்தார். எனது உதவியாளருக்கு அழைப்பாணை கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அவர் என்னுடனே வந்ததால் அழைப்பாணை வழங்கப்படவில்லை. எனது பணியில் நான் இருந்தபோது தான் எனக்கு தகவல் கொடுக்கப்பட்டது. எனக்கு தகவல் கிடைத்தவுடன் வட்டாட்சியரிடம் அனுமதி கேட்டேனா என்றால் இல்லை. அரசு வழக்குகளில் சாட்சியாக செல்வதற்கு முன்பாக முன் அனுமதி பெற வேண்டும் என்பது சட்டவிதி என்றால் அது குறித்து எனக்குதெரியும். எனது பணி முடிந்த பிறகு அது குறித்த தகவலை மேலதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். நான் அவ்வாறு தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் தெற்கு காவல் நிலைய வழக்குகளில் சாட்சியாக இருந்துள்ளேன் என்றால் சரிதான். நான் முன் விசாரணையில் சொல்லியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது முன்னிலையில் வாக்குமூலம் எவரும் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் தடய பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு பணியில் இருப்பதால் போலீசார் கேட்டுகொண்டதற்கு இணங்க அரசுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முன் விசாரணை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T.**கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.